# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 15 புதன்கிழமை 27.02.2025 கதிர் 138







# வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பால் யாழ். போதனா வைத்தியசாலை முடக்கம்

## நோயாளர்கள் பெரும் அவதி


யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையால் வைத்தியசாலையில் நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம் பித்துள்ளது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகளை அரச வைத்திய அதிகாரிகள் இடைநிறுத்தியுள்ளமையால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

அரச வைத்தியர்கள் சங்கத்தின் இந்தப் போராட்டத்தால் வைத்தியசாலையின் வழமையான செயற்பாடுகள் பலவும் இயங்காத நிலைமை ஏற்பட்டுள்ளது. ➤




# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுக்கக் கோரி யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

## இந்தியத் துணைத் தூதுவராலயத்துக்கு முன்பாகப் பொலிஸார் குவிப்பு






யாழ்ப்பாணம், பெப். 27

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுக்க நட வடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இன்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 7➤

## ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு நாளை

கொழும்பு, பெப். 27

ஹிஜ்ரி 1446 புனித ரம ழான் மாத தலைப்பிறை யைத் தீர்மானிக்கும் பிறைக்-குழு மாநாடு நாளை வெள்ளக் கிழமை மாலை 7➤



## ரணிலின் வழியிலேயே பயணிக்கின்றது அநுர

### நவீன் திஸாநாயக்க கூறுகின்றார்



கொழும்பு, பெப். 27

ரணில் விக்கிரமசிங்க வகுத்த வழியிலேயே தேசிய மக்கள் 7➤

## யாழ். போதனாவில் தாதியர்களும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அரச தாதியர் சங்கத் தினர் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலையின் பிரதான வளாகத்தில் ஒன்றுகூடிய தாதியர்கள், "தாதியர்களுக்குப் பாதீட்டில் சரியான நீதியைப் பெற்றுக்கொடு, குறைக்கப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவை அதிகரி, பதவி உயர்வை பழைய முறைப்படி வழங்கு" ஆகிய பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர். 7➤



# உள்ளூர் உற்பத்தியாளர் ஊக்குவிக்கும் நிலையம் முல்லைத்தீவு மாவட்டத்தில் திங்கட்கிழமை திறப்பு










கனடிய தமிழர் பேரவையின் செயற்திட்டங்களில் ஒன்றான உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முயற்சியின் ஆரம்பக்கட்டமாக Made in Mullaitivu உள்ளூர் உற்பத்தியாளர் ஊக்குவிக்கும் நிலையம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட புதிய பேருந்து நிலையத்தின் அருகாமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் அதிகமாக பாதிக்கப்பட்டதோடு இன்றுவரை மிக அதிகமான வறுமை நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் சிறு தொழில் செய்யும் உள்ளூர் உற்பத தியாளர்கள் அதிகமாக வாழ்ந்து வருவதோடு பன முகத்தன்மை வாய்ந்த பல உற்பத்திப்பொருட்களையும் தயாரித்து வருகின்றனர். ஆனாலும் சந்தைப்படுத்தல் வசதிகள் இல்லாததால் அவர்களின் உழைப்பிற்கும் உற்பத்திப்பொருட்களுக்குமான சரியான இலாபத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசாங்க அதிபர்களினதும், உள்ளூர் உற்பத்தியாளர்களின் வேண்டுகோளின்படி கனடிய தமிழர் பேரவை உள்ளூர் உற்பத்தியாளர்களிற்கு உதவும் வகையில் இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்துவைத்துள்ளது.

ஆயனந ை ஆரடடயவைளைர (மேட் இன் முல்லைதீவு) செயற்திட்டம் மூலமாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதோடு உற்பத்தியாளர்களுக்கு அகில இலங்கை ரீதியிலும் சர்வதேச சந்தையிலும் சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க முடியும். இது வெற்றிபெறும் பட்சத்தில் நிலையான பொருளாதார கட்டமைப்பொன்றை வடக்கு கிழக்கில் உருவாக்க முடியும். தாயக உற்பத்தி யாளர்களை ஊக்குவித்து வடக்கு கிழக்கில் உள்ள உற்பத்தியாளர்களிற்கு அவர்களது உற்பத்திகளை ஆதிகரிக்கவும், ஆலோசனைவழுங்கவும், சந்தப்பரப்பை விரிவாக்கவும் இந்த செயற்திட்டம் உதவியாக அமையும்.

இந்த திறப்பு விழாவின் பிரதம விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு உமாமகேஸ்வரன் அவர்களும், வவவுனியா பல்கலைக் கழகத்தின் சந்தைப்படுத்தல் பீடத்தின் பீடாதிபதி திரு. நந்தகோபன் அவர்களும், கனடிய தமிழர் பேரவையின் நிர்வாக இயக்குனர் திரு. டன்டன் துரைராஜா அவர்களும், கனடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் மற்றும் இத்திட்ட நன்கொடையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மலர் மாலைகள் அணிவித்து இனிதே வரவேற்கப்பட்டனர். அதன் பின்னர்,மங்கள விளக்கேற்றல் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மற்றும் மன்னார் ஆகிய வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த உள்ளூர் தயாரிப்பாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் இந்த திட்டத்தின் முக்கிய ஆதரவாளர்கள் இணைந்து மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர். இதன்பின், திரு. உமாமகேஸ்வரன், திரு. நந்தகோபன், மற்றும் திரு. டாண்டன் துரைராஜா ஆகியோரால் அதிகாரப்பூர்வமாக Made in Mullaitivu உள்ளூர் தயாரிப்பாளர்கள் உள்ளூர் உற்பத்தியாளர் ஊக்கு விக்கும் நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிகாரி திரு உமாமகேஸ்வரன் அவர்கள் தனது உரையில் முல்லைத் தீவின் நிலைமையை ஜப்பானுடன் ஒப்பிட்டு பேசினார். யுத்தக் கொடூரத்திற்குப் பிறகும், உலகின் முன்னணி பொருளாதாரமாக ஜப்பான் உருவாகியதை அவர் எடுத்துக்காட்டாக முன்வைத்து, Made in Mullaitivu போன்ற முயற்சிகள் முல்லைத் தீவின் பொருளாதார வளர்ச்சிக்கு பாதை வகுக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். வவுனியா பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் பீடத்தின் பீடாதிபதி திரு நந்தகோபன் அவர்கள், உலக சந்தைக்கு முன்னதாக இலங்கைக்குள் உள்ளூர் சந்தையை உறுதிப்படுத்துதல் முக்கியம் என்பதை வலியுறுத்தினார். முதலிலேயே உள்ளூர் சந்தையில் வலுவான நிலைப்பாடு உருவாக்கி பின்னர் உலகளாவிய வர்த்தகத்திற்கு முன்னேற வேண்டும் என்று உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இருவரும் கனடிய தமிழர் பேரவை, நேுநுனு மையம், மற்றும் கனடிய நன்கொடையாளர்களுக்கு இந்த முயற்சியில் அவர்கள் வழங்கிய உறுதிப்பாட்டிற்காக தனது நன்றியை தெரிவித்தனர்.

கனடிய தமிழர் பேரவையின் இலங்கைக்கான மனிதாபிமான திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு துஷி ஆர். துரைரத்தினம், தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும், உள்ளூர் மக்கள் அவர்களின் பிரதேசத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களை ஆதரிக்க வேண்டும் என்பதையும், வெளிநாட்டில் உள்ள தமிழ் மக்கள் இலங்கைக்கு வரும்போது இந்த மையத்தை நேரில் வந்துபார்வையிடுவதோடு இந்த உள்ளூர் உற்பத்திகளை ஆதரிக்க வேண்டும் என்றும் பொருட்களை வாங்கி வெளிநாடுகளில் பரப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பாட்டு மையத்தின் பணிப்பாளர் பிரதீபன் சோதிலிங்கம் தனது நன்றியுரை வழங்கியபோது, இந்த திட்டத்தை வெற்றிப்படுத்த முக்கிய பங்கு வகித்த அரசாங்க அதிகாரிகள் மற்றும் ஆதரவாளர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் தாயகமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை உருவாக்கிக்கொடுப்பதோடு வேலைவாய்ப்புக்களை உருவாக்கவும், உள்ளூர் உற்பத்தியை மேலும் ஊக்குவிக்கவும் முடியும். அனைத்து வளங்களும், கடின உழைப்பாளிகளும், சிறந்த உற்பத்தியாளர்களும் உள்ள எம் பிரதேசங்களில் வாழும் மக்களிற்கு இந்தத்திட்டம் பல வகையிலும் உறுதுணையாக அமையும் என நாங்கள் நம்புகின்றோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீடீ) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
Paralysis பாரிசவாதம்
Skin diseases தோல் நோய்கள்
obesity உடற்பருமன்
Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
A norectal diseases மூல வருத்தம்
Diabetic Mellitus நீரிழிவு
Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
Vericose vein Kidney stone சிறுநீரககல்
Hypertension உயர்குருதியமுக்கம்
cholesterol கொலஸ்திரோல்
GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்க
கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்
இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-07629422

# யாழ். தீவக கடற்றொழிலாளர் சங்கங்கள் போராட்டம்

# இந்திய தூதரகத்திற்கு கடும் பாதுகாப்பு!





எல்லைதாண்டும்இந்தியஇழுவை படகுகளின் அத்துமீறலை கண்டித்து யாழ் மாவட்ட தீவக கடற்றொழிலாளர் சங்கங்கள் இணைந்து இன்று போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டமானது யாழ்ப்பாணம்பண்ணை சுற்றுவட்டத்தில் ஆரம்பமாகி அருகாமையில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கடற்தொழில்நீரியல்வள திணைக்களத்தின் உதவி ஆணையாளரிடம் மகஜர் ஒன்றினை கையளித்து விட்டு தொடர்ந்து யாழ் வைத்தியசாலை வீதியூடாக யாழ். இந்திய துணை தூதரகத்தினை அடைந்தது.

இந்த போராட்டத்தின் போது,

தாண்டாதே தாண்டாதே
எல்லை தாண்டாதே!
வேண்டும் வேண்டும் நீதி
வேண்டும்!
அள்ளாதே அள்ளாதே எமது
வளத்தை அள்ளாதே!
வாழ விடு வாழ விடு எங்களை
வாழ விடு!

ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டகாரர்கள் இந்தியத் துணைத் தூதரத்துக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், பொலிஸார் இந்திய தூதரகத்திற்கு கடுமையான பாதுகாப்பினை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிமல் – ஹக்கீம் கடும் வாக்குவாதம்



கொழும்பு, பெப். 27

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் இன்று நாடாளுமன்றத்தில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. தன்னை நிதிக்குழு கூட்டத்தில் கலந்துகொள்ள விடாமல் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தினார்.

ஜனாதிபதி தன்னை நிதிக்குழுவில் இணைத்துக்கொள்ளவதாக உறுதியளித்திருந்தார் என்று சுட்டிக்காட்டிய ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி உறுதியளித்தும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு தனக்கு அனுமதி வழங்கவில்லை எனச் சபையில் குற்றம் சுமத்தினார். எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவரின் குற்றச்சாட்டையும் ஹன்சார்ட் அறிக்கையிலிருந்து நீக்குமாறு தெரிவித்தார்.

## பட்ஜெட்டை வரவேற்கிறோம்

கொழும்பு, பெப். 27

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவு திட்டத்தை ஐக்கிய மக்கள் காங்கிரஸ் வரவேற்றுள்ளது. இது தொடர்பாக கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.சி. யஹ்யாகான் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில், அரசியல் எதிர்காலம் இல்லை என்று உணர்ந்துள்ள எதிர்க்கட்சியில் உள்ள சிறுபான்மை கட்சிகள் பட்ஜெட்டை எதிர்க்கின்றன. சூனியமாகிப் போயுள்ள தமது அரசியல் எதிர்காலத்தை மீண்டும் நிலை நிறுத்த இந்த சிறுபான்மை கட்சிகள் திட்டமிட்டு மக்கள் மத்தியில் பட்ஜெட்டுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. மக்கள் இன்று இந்த சிறுபான்மை கட்சிகளை வெறுக்க ஆரம்பித்துள்ளனர்.

இதை கடந்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் அவதானிக்க முடிந்தது.

மக்கள் மிகத் தெளிவாக இருக்கின்றனர். மக்கள் பட்ஜெட்டை ஆதரிக்கின்றனர், வரவேற்கின்றனர். சிறுபான்மை கட்சிகளின் கருத்துக்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இதேவேளை சிறுபான்மை கட்சி ஒன்றின் தலைவர் சிலரை கூலிக்கமர்த்தி எமது கட்சியையும் அரசாங்கத்தையும் விமர்சித்து வருகின்றார். போலியான முகநூல் கணக்குகளை உருவாக்கி இதை மேற்கொண்டு வருகிறார். அதனைப் பற்றி எவரும் அலட்டிக் கொள்ளவில்லை. அலட்டிக்கொள்ளப் போவதுமில்லை என்றும் யஹ்யாகான் தெரிவித்துள்ளார்.(ஐ)




## நாட்டில் குற்றங்கள் அதிகரிக்கவில்லை



கொழும்பு, பெப். 27

நாட்டில் சமீப காலங்களில் குற்றங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால வியாழக்கிழமை அன்று நாடாளுமன்ற கூட்டத்தின்போது தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 14 குற்றச் சம்பவங்களும், 2016 மற்றும் 2018ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் தலா 12 சம்பவங்களும், 2024ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 14 சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த கால குற்றங்கள் குறித்த தரவுகளின்படி, இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் இதேபோன்ற நிலைமை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்தியா செல்கிறார் ரணில்



கொழும்பு, பெப். 27

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் புதுடெல்லிக்கு இன்று விஜயம் செய்ய உள்ளார்.

அங்கு உலகளாவிய பிரச்சினைகள் குறித்த மாநாட்டில் வெள்ளிக்கிழமை முக்கிய உரையை நிகழ்த்த உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புது டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும், இந்த மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, முன்னாள் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் மற்றும் முன்னாள் ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் ஆகியோரும் பேச உள்ளனர்.

தெற்காசியாவின் புவிசார் அரசியல் நிலப்பரப்பு, பொருளாதார சவால்கள் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு குறித்து தனது உரையில் விக்ரமசிங்க கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கபடுகின்றது.

கடந்த சில மாதங்களில் இந்தியாவுக்கு மூன்றாவது தடவையாக விஜயம் செய்யவுள்ள ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மோடியுடன் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# அரச பஸ்ஸில் இளம்பெண் பாலியல் வன்கொடுமை

## குற்றவாளி புகைப்படம் வெளியீடு தகவல் தந்தால் ரூ.1 லட்சம்





மகாராஷ்டிராவின் புனே நகரில் உள்ள பரபரப்பான ஸ்வர்கேட் பஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் அதிகாலையில் தனது சொந்த ஊருக்கு பஸ் ஏற 26 பெண் காத்திருந்தார்.

அப்போது அவரிடம் பேச்சு கொடுத்த ஒருவர், வேறு இடத்தில பஸ் நிற்பதாக கூறி ஆளில்லாத பஸ்ஸில் ஏறச் செய்து பாலியல் வன்கொடுமை செய்து ஓடிவிட்டார். அவர் பெண்ணை ஏமாற்றி அழைத்துச் செல்லும் சிசிடிவி காட்சிகளும் வெளியாகி உள்ளது.

பஸ் நிலையத்தில் 100 மீட்டர் தொலைவில் இருந்த பொலிஸ் சோதனைச்சாவடிக்கு அருகே நடந்த இந்த சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. அம்மாநில ஆளும் பாஜக கூட்டணி அரசை எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

குற்றவாளியின் பெயர் தத்தாத்ரேய ராமதாஸ் காடே (36 வயது) என்பதும் பல்வேறு குற்றவழக்குகளில் தொடர்புடைய அவர் கடந்த 2019 இல் சிறையில் இருந்து பெயிலில் வந்ததாகவும் கூறப்படுகிறது.

வன்கொடுமை சம்பவத்தால் அப்பகுதி மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். பாதுகாப்பு குறைபாடு இருப்பதாக கூறி பஸ் நிலையத்தை அவர்கள் சூறையாடினார்கள்.

இந்த நிலையில் அரசு பஸ்சுக்குள் இளம் பெண் வன்கொடுமை தொடர்பாக குற்றவாளி மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகாராஷ்டிர மாநில மகளிர் ஆணைய தலைவி ரூபாலி ஷாகன்கர் ஆவேசத்துடன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, இந்த சம்பவம் துரதிருஷ்ட வசமானது. பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் புகார் அளித்துள்ளார். குற்றவாளி 2 அல்லது 3 நாளில் பிடிபடுவார். குற்றவாளி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெண்கள் கண்டிப்பாக தற்காப்பு கலைகளை கற்றுக் கொள்ள வேண்டும். இது குறித்து மகளிர் ஆணையம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே குற்றவாளி ராமதாஸ் காடே புகைப்படத்தை வெளியிட்டு அவரைப் பற்றி தகவல் கொடுத்தால் ரூ.1 லட்சம் சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்த அவசரக்கூட்டம் ஏற்பாடு செய்துள்ள அம்மாநில போக்குவரத்து துறை அமைச்சர் பிரதாப் சார்னிக், விரைந்த விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# கே.ஜே.யேசுதாஸ் வைத்தியசாலையில் அனுமதி

## மகன் விஜய் யேசுதாஸ் மறுப்பு



பாடகர் கே.ஜே.யேசுதாஸ் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலுக்கு அவரது மகன் விஜய் யேசுதாஸ் மறுப்பு தெரிவித்துள்ளார்.

பிரபல பாடகர் யேசுதாஸுக்கு நேற்று இரவு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் அவருக்கு ரத்த வெள்ளை அணுக்கள் தொடர்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்றும் சமூக வலைதளங்களிலும் சில ஊடகங்களில் தகவல் வெளியாகின.

பலரும் யேசுதாஸ் விரைவில் நலமடைய வேண்டும் என்று சமூக வலைதளங்களில் பதிவிடத் தொடங்கிவிட்டனர். இந்த நிலையில் யேசுதாஸ் உடல்நிலை குறித்து வெளியான தகவலுக்கு அவரது மகன் விஜய் யேசுதாஸ் மறுப்பு தெரிவித்துள்ளார்.


தனது தந்தை யேசுதாஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்றும், அவர் தற்போது நல்ல ஆரோக்கியத்துடன் அமெரிக்காவில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 10 ஆம் திகதி அன்று யேசுதாஸ் தனது 85வது பிறந்தநாளைக் கொண்டாடினார். கடந்த 60 ஆண்டுகளாக தமிழ், மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் 60 ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களை யேசுதாஸ் பாடியுள்ளார்.

8 தேசிய விருதுகள் மற்றும் கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்க மாநில அரசு விருதுகளையும் பெற்றுள்ளார். அவருக்கு 1975-ல் பத்மஸ்ரீ, 2002ல் பத்ம பூஷண் மற்றும் 2017ல் பிரபு விபூஷண் உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டன.

# சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கு விஜயலட்சுமியிடம் 7 மணி நேரம் விசாரணை





சீமானுக்கு எதிரான பாலியல் வழக்கில் நடிகை விஜயலட்சுமியிடம் 7 மணி நேரம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றி விட்டதாக நடிகை விஜயலட்சுமி கடந்த 2011ஆம் ஆண்டு வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அந்த புகாரை 2012ஆம் ஆண்டு விஜயலட்சுமி திரும்ப பெற்றுக்கொண்ட நிலையில் பல்வேறு காரணங்களுக்காக இந்த விசாரணை மீண்டும் நடைபெற்று வருவதாகவும், இந்த வழக்கை இரத்து செய்ய வேண்டும் எனவும் சென்னை உயர் நீதிமன்றில் சீமான் மனு தாக்கல் செய்து இருந்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதி, இந்த வழக்கை விசாரிக்கலாம் எனவும், 12 வாரங்களுக்குள் விசாரணையை முடித்து அறிக்கையை தாக்கல்செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டார். அதன்பேரில் வளசரவாக்கம் பொலிஸார் இந்த வழக்கில் மீண்டும் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.


அதன்படி, நேற்று வழக்கு தொடர்பாக பெங்களூருவில் உள்ள நடிகை விஜயலட்சுமி வீட்டுக்கு வளசரவாக்கம் பொலிஸார் மீண்டும் நேரில் சென்று அவரிடம் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

இதற்கிடையில் இந்த வழக்கு தொடர்பாக வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் இன்று விசாரணைக்கு சமூகமளிக்குமாறு சீமானுக்கு பொலிஸார் சம்மன் அனுப்பியிருந்தனர்.

எனினும் திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டத்தில் கட்சி நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனைக்கூட்டம் நடைபெற இருப்பதால் சீமான், இன்று ஆஜராகமாட்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வாறு இருப்பினும் வளசரவாக்கம் பொலிஸாரிடம் உரிய விளக்கம் அளிக்க சீமானின் வழக்கறிஞர்கள் குழு அங்கு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அசாம் பகுதியில் நிலநடுக்கம்!




அசாமின் மோரிகான் (**Morigaon**) பகுதியில் இன்று காலை 5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக இந்திய தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் 91 கி.மீ ஆழத்தில் காலை 6.10 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

நிலநடுக்கத்தின் மையம் வங்காள விரிகுடாவில் இருந்ததால் அதன் தாக்கம் ‘மிகக் குறைவானது’ என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிலநடுக்கத்தினால் உயிர் மற்றும் சொத்து சேதங்கள் ஏற்பட்டதா என்பது உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

ஒடிசாவின் பாரதீப், பூரி, பெர்ஹாம்பூர் மற்றும் சில இடங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் மிதமானதாகக் கருதப்படுகிறது.

இது உட்புறப் பொருட்கள் குறிப்பிடத்தக்க குலுக்கல், சத்தம் மற்றும் சிறிய சேதத்தை ஏற்படுத்தும்.

# வரதட்சிணை இல்லாத கல்யாணமா?



திருமணத்தின்போது பெண்ணுக்காகப் பொன்னும் பொருளும் கொடுப்பது உலகம் முழுவதும் வழக்கத்தில் இருந்திருக்கிறது. சட்டங்கள் இதைத் தடை செய்தாலும், இன்றளவிலும் இது ஒழியவில்லை என்பது நாம் அறிந்ததே.

**'Dowry'** என்கிற வார்த்தையை ஆராய்ந்து பார்த்தால் இதுபற்றி மேலும் தெரிந்துகொள்ளலாம்.

**The word dowry comes from the French word dowarie and was first used in the Middle English period (1150-1500). The earliest known use of the word was in the writing of Robert Mannyng> a poet and historian> around 1330.**

**A dowry is a gift of property or money given by either the bride or groom to their future spouse upon marriage. It can also refer to the property or savings a woman brings into a marriage.//**

இதே விஷயத்தைதான் மநுஸ்மிருதியும் சொல்கிறது.

ஆனால் னுழறசல என்கிற சொல்லுக்கு இணையான சொல் என்று பார்த்தால் சீதனம் என்பதே சரியாக இருக்கும். வரதட்சிணை என்பது இதிலிருந்து சற்று மாறுபடுகிறது.

தட்சிணை என்றால் காணிக்கை என்பதை நாம் அறிவோம். அதுவும் தட்சிணை என்பது அவரவர் வசதிக்குத் தகுந்தபடி இயன்றதைக் கொடுப்பதுதான். குறிப்பிட்ட தொகையைக் கட்டாயமாக வசூலிப்பதற்குப் பெயர் கட்டணம். குநநள, ளநசஎைஉந உாயசபநள, ஊழஅஅளைளழைெ இப்படி.

கலைகளைக் கற்றுக் கொடுக்கும் குருவுக்குத் தொடங்கி, வீட்டு விசேஷங்களைச் செய்துவைக்கும் பார்ப்பனர் வரை, இங்கே எல்லாவற்றுக்குமே இப்பொழுது 'குழைநன சுயவந'தான் இல்லையா?

அப்படிப் பார்த்தால் இன்றைய நிலையில் தட்சிணை என்கிற சொல்லை நாம் உபயோகிக்கவே கூடாது.

### இதில் வரதட்சிணை என்றால்?

வரன் என்றால் மணமகன் அல்லது கணவன் என்று பொருள். தங்கள் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள, வரனுக்குக் கொடுக்கும் கட்டணத்தையே வரதட்சிணை என்று கௌரவமாகச் சொல்லிக்கொள்கிறோம்.

(வது என்கிற சொல்தான் மணப்பெண்ணைக் குறிக்கும். அது தெரியாமல், மகனுக்குப் பெண் பார்ப்பவர்கள்கூட வரன் பார்க்கிறோம் என்று சொல்வர்.

பெண்ணை மணப்பதற்கு ஒருவனுக்கு எதற்குத் தட்சிணை ஃ கட்டணம் அளிக்க வேண்டும்? பரிசம் கொடுத்து ஒரு பெண்ணை மணந்தது போய், இந்தத் தட்சிணை கொடுத்து மணப்பது என்பது எப்படி வந்திருக்கும் என்று யோசித்தால், 'உயர் சாதி இந்துப் பெண்'ணில் அதற்கான பதில் இருக்கிறது.

ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்வது, சீர் வரிசைகளை அவர்களின் பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொள்வது, திருமணமான இளம் மனைவியைக் கைவிட்டுவிடுவது, வீட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டு மறுபடியும் மணம் செய்து கொண்ட எவரையும் பெயருக்குக்கூட எட்டிப் பார்க்காமல் இருப்பது எனப் பத்து, பதினொன்று, இருபது அல்லது நூற்று ஐம்பது பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொண்டு பின்பு அதையே வியாபாரம் ஆக்கிவிடுவர்.

இப்படித்தான் இது தொடங்கி நாடு முழுவதும் பரவியிருக்கக்கூடும். இன்றுவரை இந்தியா முழுவதும், எந்த ஒரு சாதி மத வேற்றுமையும் இல்லாமல் இதை நடைமுறையில் வைத்திருக்கிறார்கள்.

பெண்கள் தன்னிச்சையாகச் செயற்படக் கூடாது என்பதற்காகவே அவர்களுடைய கல்வி மற்றும் பொருளாதார நிலையை ஒடுக்கி வைத்திருக்கும் மனுதர்மம், பெண்களுக்கான சொத்துகள் பற்றி ஆங்காங்கே சொல்லி வைத்திருக்கிறது.

அந்தச் சொத்துக்குப் பெயர்தான் ஸ்த்ரீதனம். அதைத்தான் நாம் சீதனம் என்கிறோம்.

இப்படிப்பட்ட சீதனமானது பெண்களுக்கு ஆறு வகையில் கிடைக்கும்.

திருமணச் சமயத்தில் அக்கினியின் முன்னிலையில் தந்தையினால் வழங்கப்படுவது பெண்ணின் சொந்தச் சொத்தாகிறது. இதற்கு 'அத்யாக்கினி' என்று பெயர்.

திருமணமான பெண்ணைப் புகுந்த வீட்டிற்குக் கணவனுடன் அனுப்பி வைக்கும்போது அவளுக்குக் கொடுத்த பொருள், இதற்கு 'ஆத்யாவாஹனிகம்' என்று பெயர். திருமணச் சமயத்தில் மற்றவர்கள் அன்புடன் அவளுக்குக் கொடுத்த பொருட்கள். கூடப்பிறந்த சகோதரர்கள் அவள் தங்கள் இல்லத்துக்கு வரும்போது அல்லது அவர்கள் இல்லத்துக்கு இவர்கள் போகும்போது மற்றும் விசேஷ நாட்களிலோ அவளுக்கு வழங்கியவை.

### தாய் மூலமாகக் கிடைத்த தனம்.

(தாய் தந்தை இறந்த பிறகு, குடும்பச் சொத்தைப் பிரிக்கும் போது பெண்கள் திருமணம் ஆகாமலிருந்தால், அவர்களுக்கு இந்தக் கடைசி இரண்டு தனமும் கிடைக்கலாம் என்பதை நாம் மனதில் வைத்துக கொள்ள வேண்டும்).

இந்த ஆறு வகைகளில் பெண்களுக்குக் கிடைக்கும் தனமானது அவளுடைய சொந்தச் சொத்தாகும்.

திருமணத்திற்குப் பிறகு கணவனின் வீட்டுச் சொத்திணலிருந்தோ, தாய் வீட்டுச் சொத்திலிருந்தோ கிடைத்தவையும் கணவன் அன்போடு அவளுக்கு அளித்தவையும், முதலில் சொன்னபடி ஆறு வகைகளில் அவளுக்குக் கிடைத்தவையுமான சொத்துகள் முழுவதும் கணவன் உயிரோடு இருந்து இவள் இறந்து விட்டாலும் இவளது சந்ததியினரையே சேரும். கணவனுக்கு அந்தச் சொத்தில் உரிமை இல்லை. (மநு - 9 : 195)

பாகப் பிரிவினைச் செய்துகொள்ளும்போது, திருமணமாகாத சகோதரிகள் இருந்தால், சகோதரர்கள் அவரவர் பங்கிலிருந்து நான்கில் ஒரு பங்கை அந்தப் பெண்களுக்குக் கொடுக்க வேண்டும் (மநு - 9 : 118)

தாயும் தந்தையும் இறந்த பிறகு சகோதரர்கள் சொத்தைப் பிரித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் உயிரோடு இருக்கும்போது சொத்தில் பிள்ளைகளுக்கு எந்த உரிமையும் கிடையாது. (மநு - 9 : 104)

ஒரு பெண் இறந்தால் அவளுடைய சீதனப் பொருள் அவளுடைய மணமாகாத பெண்களுக்குச் சேரும் (மநு - 9 : 131)

ஆசுர விவாகம் என்றால் பசு, காளை போன்றவற்றை ஒன்றோ இரண்டோ (சுல்கம் ஃ பரிசம்) வரனிடமிருந்து பெற்றுக்கொண்டு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கலாம். ஆனால் இதுவும்கூடப் பெண்ணை விற்பதற்குச் சமமே! (மநு - 3 : 53)

பெண்ணுக்கு ஈடாகப் பணம் வாங்காமல், அந்தப் பரிசப் பணத்தைப் பெண்ணுக்காகக் கொடுப்பது விற்பனை இல்லை. அப்படிப் பெண்ணை மணம் செய்து கொடுப்பவரே அவளிடம் அன்பும் கருணையும் உடையவர். (மநு - 3 : 54)

தந்தை, கணவன், உடன் பிறந்தவர்கள், மைத்துனர் ஆகியவர்கள் திருமணத்தின்போது பெண்ணுக்கு ஆடை, ஆபரணங்கள் போன்றவற்றைக் கொடுத்து அவளை மகிழ்வுறச் செய்வது கடன். (மநு - 3 : 55)

ஃஃஃஅட, மநு பெண்களிடம் நீதி தவறாமல் பரிவுடன்தானே தருமங்களை வகுத்திருக்கிறார் என்றுதானே தோன்றுகிறது? பெண்களை மநு தர்மம் எவ்வளவு கேவலமாகச் சித்தரிக்கிறது என்று தொடர்ந்து வருவதைக் கவனித்தால் புரியும்.ஃஃஃ

ஆடை அணிகளால் மகிழ்வுற்று விளங்கும் பெண் உள்ள வீடுதான் செழிப்பாக இருக்கும், பிறந்த வீட்டை எண்ணி பெண் மனம் நொந்தால், அதுவே சாபம் ஆகும். அந்தக் குலம் நாசமடையும்,

அதனால் பண்டிகை நாள் கிழமைகளில் உடன் பிறந்த சகோதரிகளுக்கு ஆடை ஆபரணங்களைக் கொடுத்து சந்தோஷப் படுத்த வேண்டும். ஆடை அணிகலன்களால் திருப்தியுறாத மனைவி, கணவனுக்கு மகிழ்ச்சி தரமாட்டாள். அவளிடம் சந்ததி உண்டாகாது. கணவனால் விரும்பப்படாத பெண் பிறரால் தீண்டப்பட்டு அதனால் அந்தக் குலமே தாழ்ந்து போகும். (மநு - 3 : 54 - 62)

ஆக, பெண்கள் ஆடை ஆபரணங்களுக்கு அலைபவர்கள் என மநுதர்மம் அனைவரையும் நம்பவைக்கிறது. சகோதரி மீது உள்ள அன்பால் அவளுக்குச் செய்வது போக, சாபத்துக்குப் பயந்து செய்தாக வேண்டிய கட்டாயத்தை உடன் பிறந்த ஆண்களுக்கு உருவாக்குகிறது. அவளை முறையாகக் கவனிக்கவில்லை என்றால், அவள் தடம் மாறிப் போவாள் என்கிற பயத்தைக் கணவனுக்குள் விதைக்கிறது.

தொடக்கக் காலத்தில் பரிசப் பணம் பெற்றுக் கொண்டு பெண்களைத் திருமணம் வரதட்சிணைக் கொடுத்து பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கும் நெருக்கடியையும், இந்த மனுதான் ஏற்படுத்தியிருக்கிறது.

கருத்தடை வசதிகள் இல்லாத அந்தக் காலக்கட்டத்தில், 'எட்டு நாயும் பொட்டைக் குட்டியும்' என வசனம் பேசிக்கொண்டே, பத்து, பன்னிரண்டு, ஏன், பதினான்கு பதினைந்து பிள்ளைகளைக் கூடப் பெற்றுக்கொண்டனர். அவர்களுக்கு உணவு கொடுத்து, பேணி வளர்ப்பதே சவாலான விஷயம்தான். குடும்பத்தில் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போனால், நிலைமை பரிதாபம்தான்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் வரன் தேடி திருமணம் முடிப்பதற்குள், யாரவது ஒரு பெண் (மணமாகாமல்) பூப்படைந்துவிட்டால் அவ்வளவுதான்!

இந்த அழகில், தாய், தந்தை மறைவுக்குப் பிறகு, சொத்தைப் பிரிக்கும்போது திருமணமாகாத சகோதரிகள் வீட்டில் இருப்பின், அவர்களுக்கு ஒரு பங்கு கொடுக்க, எத்தனை சகோதரர்கள் தயாராக இருப்பார்கள்? கூடுமானவரை, கிடைத்த வரன்களுக்கு அவர்களைத் தள்ளிவிடத்தானே பார்ப்பார்கள்.

'கலம் புடைத்தால் பதுக்கு தேறாது' எனும் பழமொழி ஒன்று உண்டு. அது போல, குடும்பச் சொத்துகள், மிக மிகச் சொற்பமானதாகவே அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டிருக்கும். அதைப் பங்குபோட எக்கச்சக்க அடிதடி தகராறுதான் நடந்திருக்கும்.

'புத்' எனும் நரகத்தில் வீழாமல் காப்பதால், குடும்பத்தில் முதலாவதாகப் பிறந்த ஆண் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகிறான். சொத்தில்கூட அடுத்தடுத்த பிள்ளைகளுக்குக் கிடைக்கும் பங்கை விட அவனுக்கு அதிகம் கொடுக்கப்பட வேண்டும் என்கிறது மநு. அதற்கு உத்தாரபாகம் என்று பெயர்.

ஒரு பெண்ணுக்குச் சேரும் பங்கை நேரடியாக அவளால் அனுபவிக்க இயலாது. எப்படி இருந்தாலும் அது மாப்பிள்ளையையே போய்ச் சேரும். சுற்றி வளைத்து, மகன்களுக்குச் சேர வேண்டிய சொத்தில் மாப்பிள்ளைக்குப் பங்கு கொடுப்பதா?

அதனால் தந்தையுமே, தான் உயிருடன் இருக்கும்போதே பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்து அனுப்பிவிடத் துடிப்பார்.

தந்தைக்கு அடுத்து மூத்த மகன்தான் என்கிற நிலைமை இருந்ததால், மொத்தக் குடும்பமும் அவனுக்குக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். பெற்ற தாயே ஆனாலும் இதற்கு விதிவிலக்கில்லை.

மூத்த மகனைப் பெயர் சொல்லி அழைக்கக் கூட தயங்கிய நிலையெல்லாம் இருந்திருக்கிறது.

ஆனால் மகன்கள் அம்மாவை 'டீ' போட்டு ஒருமையில் அழைப்பதும், 'பட்டி ' 'படவா ' என இகழ்வதும் கூட சகஜமாக இருந்திருக்கிறது.

அப்படி இருக்கும்போது, பெற்ற மகள்களின் வாழ்க்கையை முடிவு செய்யும் உரிமை, அவர்களுக்கு எங்கே இருந்திருக்கும்? மனம் தாங்காமல் ஏதாவது சொன்னால்கூட, 'உனக்கு என்ன தெரியும், மூலையில் கிட' என்று ஒடுக்கிவிடுவார்கள். தன் விருப்பத்தை வாய் திறந்து பெண்களால் சொல்லவே இயலாது.

'சொத்து இருந்தால்தானே இதெல்லாம், இல்லாமல் போனால்?' என்கிற கேள்வி எழலாம். உண்மையில், சொத்துபத்து இல்லாமல் போனாலும்கூட, வேறு ஒரு நெருக்கடியும் இருந்தது.

வீட்டுப் பெண்களுக்குத் திருமணம் முடிக்காமல், மூத்த வர்களாக இருந்தாலும்கூட மகன்களைத் திருமணம் செய்துகொள்ள நம் குடும்ப அமைப்பு சுலபத்தில் அனும திப்பதில்லை. அதனால்கூட பெண்பிள்ளைகளுக்கு அவசர அவசரமாகத் திருமணம் செய்துகொடுக்கும் கட்டாயம் இருந்தது. ஸ்திரீதனம் எனப் பெருமையாகச் சொல்லிக்கொண்டாலும், அப்படி ஒரு தனம் பெண்ணுக்குக் கிடைத்தாலும், அந்தத் தனத்தால் அவளுக்கு எந்த ஒரு பயனும் இருந்திருக்காது. அதைச் சுயேச்சையாக உபயோகப்படுத்த நம் குடும்ப அமைப்பு (7ஆம் பக்கம் பார்க்க..)

# பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவதை அடுத்து இஸ்ரேல் பணயக்கைதிகள் உடல்களை ஒப்படைத்த ஹமாஸ்

இஸ்ரேல் சிறையில் இருந்து நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் விடுவிக்கப்படுவதை ஒட்டி ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்ற பணயக்கைதிகளில் நான்கு பேரின் உடல்களை நேற்று ரெட் கிராஸிடம் ஒப்படைத்தது.

ரெட் கிராஸிடம் ஹமாஸ் நான்கு பேரின் உடல்களை ஒப்படைத்ததை இஸ்ரேல் பாதுகாப்பு துறை அதிகாரி உறுதிப்படுத்தி இருக்கிறார். எகிப்து இடைத்தரகர்கள் உதவியோடு நான்கு பேரின் உடல்கள் அடங்கிய சவப்பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. நான்கு பேரை அடையாளம் காணும் பணிகள் துவங்கியுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.


நான்கு பேரின் உடல்கள் வழங்கப்பட்ட அதே நேரத்தில் இஸ்ரேல் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட கைதிகளை ரெட் கிராஸ் வாகனம் ஏற்றிவந்தது. பாலஸ்தீனர்கள் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டதை அடுத்து அவர்களது குடும்பத்தார், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பெய்துனியாவில் கூடினர். ரெட் கிராஸ் வாகனம் தங்களை நோக்கி வருவதை கண்ட அவர்கள் கைத்தட்டி உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

ஹமாஸ் பணயக்கைதிகளை விடுவிக்கும் முறையை கண்டித்து பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதை தாமதப்படுத்தியது.

இதற்கு கண்டனம் தெரிவித்த ஹமாஸ், இது போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என தெரிவித்தது.



## தோல்வியுற்ற நாடான பாகிஸ்தான் மற்ற நாடுகளுக்கு அறிவுரை கூற தகுதி இல்லை ஐ.நா.வில் சினந்த இந்தியா!



ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சில் (ருரேசுஊ) கூட்டம் நடைபெற்றது. இதில் ஜம்மு காஷ்மீரில் குறித்து பேசிய பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது.

ஐநா கூட்டத்தில் பேசியிருந்த பாகிஸ்தானின் மனித உரிமைகள் அமைச்சர் அசாம் நசீர், காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், அது நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார். மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்ந்து மறுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக கூட்டத்தில் பேசிய இந்திய தூதர் க்ஷிதிஜ் தியாகி, பாகிஸ்தானின் தலைவர்கள், அதிகாரிகள் அந்த நாட்டின் ராணுவ பயங்கரவாதத்தினர் எழுதி கொடுக்கும் பொய்களை பரப்புவதை பார்ப்பது வருத்தம் அளிக்கிறது.

இந்த கவுன்சிலின் நேரத்தை, சர்வதேச உதவிகளை நம்பி வாழும் ஒரு தோல்வியுற்ற அரசு தொடர்ந்து வீணடிப்பது துரதிர்ஷ்டவசமானது. பாகிஸ்தானின் கருத்துக்கள் அதன் பாசாங்குத்தனத்தையும், அதன் மனிதாபிமானமற்ற செயல்களையும், அதன் திறமையின்மையையும் வெளிப்படுத்துகின்றன.

இந்தியா ஜனநாயகம், முன்னேற்றம் மற்றும் அதன் மக்களின் கண்ணியத்தை உறுதி செய்வதில் கவனம் செலுத்துகிறது. இவை பாகிஸ்தான் கற்றுக்கொள்ள வேண்டிய மதிப்புகள் ஆகும்.

சர்வதேச தளங்களை தவறாகப் பயன்படுத்தி இந்தியாவுக்கு எதிரான பேச்சுக்களை பாகிஸ்தான் தூண்டி வருகிறது. அதே நேரத்தில் அதன் சொந்த உள்நாட்டு நெருக்கடிகளைத் தீர்க்கத் தவறிவிட்டது.

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்கள் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதியாகவே இருக்கும்.

கடந்த சில ஆண்டுகளில் ஜம்மு காஷ்மீரில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றமே அங்குள்ள நிலைமையை எடுத்துக்காட்டுகிறது.

பல தசாப்தங்களாக பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் இயல்பு நிலையைக் கொண்டுவருவதற்கான அரசின் உறுதிப்பாட்டின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு இந்த வெற்றிகள் ஒரு சான்றாகும். பாகிஸ்தான் தனது மக்களுக்கு உண்மையான ஆட்சி மற்றும் நீதியை வழங்குவதில் கவனம் செலுத்தலாம்.

ஒரு நாடாக, பாகிஸ்தான் மனித உரிமைகளை மீறுவதன் மூலமும், சிறுபான்மையினரை ஒடுக்குவதன் மூலமும், ஜனநாயக விழுமியங்களைப் புறக்கணிப்பதன் மூலமும் தனது கொள்கைகளைத் திணிக்கிறது.

ஐநா சபையால் பயங்கரவாதிகள் என்று அறிவிக்கப்பட்டவர்களுக்குப் பாகிஸ்தான் வெட்கமின்றி அடைக்கலம் அளிக்கிறது. எனவே பாகிஸ்தான் யாருக்கும் உபதேசம் செய்யும் நிலையில் இல்லை என்று தெரிவித்தார்.

## இங்கிலாந்தின் வாகன உற்பத்தி பெரும் நெருக்கடியில்!



ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனா போன்ற முக்கிய சந்தைகளின் பலவீனம் காரணமாக 2025 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் வாகன உற்பத்தி மோசமான தொடக்கத்தில் இருந்தது,

கடந்த 2024 ஜனவரியுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் ஜனவரியில் வாகன உற்பத்தி சுமார் 18% குறைந்ததாக தொழில்துறை தரவுகள் இன்று வெளிப்படுத்தின.

மோட்டார் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் (SMMT) தரவுகளின்படி,

ஜனவரி மாதத்திற்கான இங்கிலாந்தின் வாகன உற்பத்தியின் எண்ணிக்கை முந்தைய ஆண்டை விட 17.7மூ குறைந்து 78,012 அலகுகளாக பதிவானது.

பயணிகள் கார் உற்பத்தி 14.3% குறைந்து 71,104 அலகுகளாகவும், வணிக வாகன உற்பத்தி 41.5மூ குறைந்து 6,908 அலகுகளாகவும் இருந்தது.

அதேநேரம், வாகன ஏற்றுமதி 13.4% குறைந்து 61,399 அலகுகளாகவும், உள்நாட்டு விற்பனை 30.5மூ குறைந்து 16,613 அலகுகளாகவும் பதிவானது.

இதனால் ஏற்றுமதியின் சதவீதம் 78.7% ஆக காணப்பட்டது.

இங்கிலாந்தின் வாகன உற்பத்தியாளர்கள் உலகளாவிய வர்த்தக நிச்சயமற்ற தன்மை, சவாலான உற்பத்தி நிலைமைகள் மற்றும் சந்தை மாற்றம் ஆகியவற்றினால் கடும் போராட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை, இங்கிலாந்தின் ஆடம்பர கார் தயாரிப்பாளரான ஆஸ்டன் மார்ட்டின் (AML.L)> புதன்கிழமையன்று அதன் பணியாளர்களில் 5% ஆட்குறைப்பு அறிவிப்பை வெளியிட்டது.

இங்கிலாந்து வாகனத் துறைக்கு உதவ அவசர அரசாங்க உதவியின் அவசியத்தையும் மோட்டார் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

## ட்ரம்புடன் வெள்ளை மாளிகையில் இங்கிலாந்து பிரதமர் சந்திப்பு




அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்புடன், இங்கிலாந்து பிரதமர் சர் கீர் ஸ்டார்மர் (ளுசை முநசை ளுவயசஅநச) வெள்ளை மாளிகையில் இன்று (27) சந்திப்பினை மேற்கொள்ளவுள்ளார்.

இரு தலைவர்களும் முன்னதாக சந்தித்திருந்த போதிலும், 2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், டொனால்ட் ட்ரம்ப்பை இங்கிலாந்துப் பிரதமர் சந்திப்பது இதுவே முதல் முறை ஆகும்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் வெள்ளை மாளிகைக்கு வருகை தரும் ஆறாவது தலைவர் ஸ்டார்மர் ஆவார்.

பிரான்ஸ் பிரதமர் இம்மானுவேல் மக்ரேனின் வெள்ளை மாளிகை விஜயத்திற்கு சில நாட்களுக்குப் பின்னர் ஸ்டார்மரின் பயணம் அமையவுள்ளது.

அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா இடையேயான உறவை வடிவமைக்க இந்த சந்திப்பு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பா மீதான அமெரிக்கத் தலைவரின் கட்டண அச்சுறுத்தல்கள் மற்றும் உக்ரேனில் நடந்து வரும் மோதல்கள், இருதரப்பு வர்த்தக உறவுகள் தொடர்பில் இதன்போது பிரதானமாக கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ட்ரம்ப் நிர்வாகம் கடந்த வாரம் ரஷ்யாவுடன் உக்ரேனிய அல்லது பிற ஐரோப்பிய கூட்டாளிகள் பிரதிநிதித்துவம் இல்லாமல் சவுதி அரேபியாவில் பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்த வாரம் அமெரிக்கா உக்ரேன் போருக்கு ரஷ்யாவை குற்றம் சாட்டும் ஐ.நா.வின் தீர்மானங்களில் கையெழுத்திட மறுத்துவிட்டது.

ட்ரம்பின் நிர்வாகத்தின் கீழ் உக்ரேன் போர் தொடர்பான வெள்ளை மாளிகையின் பார்வை அட்லாண்டிக் கடல்கடந்த உறவுகளில் மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.



## கனிமவள ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாளை அமெரிக்கா வருகிறார் ஜெலன்ஸ்கி

உக்ரைன்-ரஷ்யா இடையே 3 ஆண்டுக்கு மேல் போர் நடந்துவருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க அதிபர் டிரம்ப் நடவடிக்கை எடுத்து, ரஷ்ய அதிபர் புதினுடன் தொலைபேசியில் உரையாடினார்.

ரஷ்யா போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய நிதி உதவிகளுக்கு பதிலாக உக்ரைனில் உள்ள அரிய வகை கனிம வளங்களை வெட்டி எடுக்கும் உரிமையை அமெரிக்காவுக்கு கால வரம்பில்லாமல் வழங்க டிரம்ப் வலியுறுத்தி வந்தார். உக்ரைனில் தேர்தல் நடத்தாமல் ஜெலன்ஸ்கி பதவியில் நீடிப்பதாக டிரம்ப் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, அமெரிக்கா செல்லும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அமெரிக்காவுடன் கனிம வள ஒப்பந்தத்தில் கையெழுத்து போட சம்மதம் தெரிவித்துள்ளார்.

அப்போது, ரஷ்யாவுக்கு எதிரான போரில் அனைத்து உதவிகளையும் அமெரிக்காவிடம் இருந்து கேட்டுப் பெற திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கனிமவள ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாளை அமெரிக்கா வருகிறார் என அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

## வைத்தியர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பல்வேறு சிகிச்சைகளுக்காக வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்கள் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருவதால் நோயாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனவும், நோயாளர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட வேண்டும் எனவும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவகக் கடற்றொழில் அமைப்புக்களான மண்டைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, வேலணை, புங்குடுதீவு உள்ளிட்ட கடற்றொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

யாழ். பண்ணையில் உள்ள கடல்வள நீரியல் திணைக்களம் முன்பாகத் திரண்ட மீனவர்கள் அங்கிருந்து, இந்தியத் துணைத்தூதரகத்துக்குச் சென்று, அங்கிருந்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

இதன்போது "நிறுத்து நிறுத்து இழுவை மடி தொழிலை நிறுத்து!, தாண்டாதே தாண்டாதே எல்லை தாண்டாதே!, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்!, அள்ளாதே அள்ளாதே எமது வளத்தை அள்ளாதே!, வாழ விடு வாழ விடு எங்களை வாழ விடு!, எல்லை தாண்டி வந்து எம் இனத்தைப் பட்டினி ஆக்காதே" ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களால் நீரியல் வளத்துறை அலுவலகம், இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மகஜர்கள் கையளிக்கப்பட்டனர்.

இதேவேளை, போராட்டக்காரர்கள் வருகை தந்த பாதைக்குப் போக்குவரத்துப் பொலிஸார் கடுமையான பாதுகாப்பை வழங்கியதோடு குறித்த பாதையில் பொது மக்கள் பயணிக்க அனுமதி மறுக்கப்பட்டது. மேலும் பொலிஸார் கண்ணீர்ப் புகைகுண்டுகள் சகிதம் இந்தியத் துணைத் தூதுவராலயத்துக்குக் கடுமையான பாதுகாப்பை வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## றமழான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டின் எப்பிரதேசத்திலாவது ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 0112432110, 0112451245, 0777316415 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் முஸ்லிம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது

# 2025 வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தாதியர்கள் போராட்டம்!

2025 வரவு செலவுத் திட்டத்தில் கொடுப்பனவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நண்பகல் 12 மணி முதல் 1.00 மணி வரை நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளுக்கு முன்பாகவும் அரசாங்க தாதியர் அதிகாரிகள் சங்கம் ஒரு மணி நேர போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அடிப்படை சம்பளத்தில் 1/160 வீதம் வழங்கப்பட்டு வந்த கூடுதல் நேர கொடுப்பனவை 1/200 ஆகக் குறைத்தல், இரண்டாம் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் அரசு விடுமுறை கொடுப்பனவு மற்றும் வாராந்திர ஓய்வு கொடுப்பனவை 1/30 ஆகக் குறைத்தல் மற்றும் பதவி உயர்வு முறையைக் குறைத்தல் ஆகிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மேலதிக நேரம் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சினையை முன்னிறுத்தி கிழக்கு மாகாணத்தில் மட்டும் இன்று சுகயீன விடுமுறையை பதிவு செய்து அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார். மேலும் இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் அதிபர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படாது குறித்து அதி ருப்தி அடைந்துள்ளதாக அதிபர் தர அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்காலத்தில் அனைத்து தர அதிபர்களையும் கொழும்புக்கு வரவழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் நிமல் முதுங்கொடுவ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெடுக்குநாறிமலையில் அமைதியாக இடம்பெற்ற சிவராத்திரி தின விசேட பூஜைகள்!

இந்த ஆண்டு நெடுங்கேணி வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தின விசேட பூஜைகள் அமைதியாக இடம்பெற்றன.

இம்முறை ஆலயத்தில் மாலை ஆறு மணிவரை மாத்திரமே பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆலய பகுதியில் காலை முதல் நெடுங்கேணி பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எனினும் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிபாடுகளுக்கு எந்தவொரு இடையூறும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

கடந்தவருடம் சிவராத்திரி தினமன்று வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தின பூஜைகளை செய்யமுற்பட்ட போது நெடுங்கேணி பொலிஸாரால் அடாவடியான முறையில் எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டனர். பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு அடாவடிதனம் ஏதும் இன்றி அமைதியான முறையில் சிவராத்திரி தின பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில் 6 மணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட சிவராத்திரி விழா இடம்பெற்றமையை 'சிவன்பகல்' என்றே கூற வேண்டும், இங்கே அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படுகின்றது என சமூக செயற்பாட்டாளர் எஸ்.தவபாலன் குற்றஞ்சாட்டியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

வழிபாட்டின் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி அரசு பயணிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையையே தேசிய மக்கள் சக்தி அரசு செயற்படுத்தி வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க அன்று இட்ட அடிதளத்தில் அநுர பயணிக்கின்றார் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசின் பாதீடு உறுதிப்படுத்துகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தால்தான் பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளதுபோலும்.

தேசிய மக்கள் சக்தி கனவுலகமொன்றை உருவாக்கியது. ஆனால், நடைமுறையில் வேறு விடயம் நடக்கின்றது. இது பற்றி கதைப்பதற்கு பலமான எதிர்க்கட்சி இல்லை. இருக்கின்ற எதிர்க்கட்சி தூங்குகின்றது." - என்றார்.

# புத்தளத்தில் இளம் யுவதி மர்ம மரணம்

புத்தளம், பெப். 27

புத்தளம், கல்லடி பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் யுவதி ஒருவர் மர்மமான முறையில் நேற்று புதன் கிழமை உயிரிழந்துள்ளார் என்று புத்தளம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று அந்த யுவதி தனது வீட்டில் மயங்கிய நிலையில் காணப்பட்ட நிலையில், அவரது பெற்றோர் அவரை புத்தளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

இதன்போது யுவதியைச் சோதனையிட்டு பார்த்த வைத்தியர்கள், யுவதி ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

யுவதியின் உடற்பாகங்கள் அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்குப் பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் புத்தளம் தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வரதட்சிணை இல்லாத ......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு பெண்ணை எந்த அளவுக்கு அனுமதித்திருக்கும் என்பது கேள்விக்குறியே.

நகை, புடவைகளைக்கூட மாமியாரிடம்கொடுத்துவிட்டு, அவர் அனுமதித்தால் மட்டுமே போட்டு அழகு பார்க்க முடியும். அடுத்து, அவளுக்கு கொடுத்த செல்வத்தைத் தங்கள் வீட்டுப் பெண்களின் திருமணச் சீதனத்துக்குக் கூசாமல் உபயோகித்துக்கொள்வர்.

மேலும், திருமணமான பெண்ணுக்கு, அவர்களுடைய பிறந்தவீட்டுச் சொத்தில் பங்கே கிடையாது, அது அவளது தாய்வழி சீதனமாக இருந்தால்கூட!

வைரத் தோடு, வைர மூக்குத்தி, கணிசமான அளவில் நகைகள், குடம், குத்துவிளக்கு உட்பட, வெள்ளிப் பாத்திரங்கள், அத்துடன் ரொக்கத்துடன் கூடிய பேரம் இல்லாமல் நல்ல பணியில் ஃ செல்வ நிலையில், வயதுப் பொருத்தத்துடன் உள்ள மணமகன் ஒரு பெண்ணுக்குக் கிடைக்க மாட்டான். இப்படிப்பட்ட பேரம் பேசாத ஆண் மகன் ஃ அவனது குடும்பம் கிடைப்பது அரிதினும் அரிது.

உண்மையில் சொல்லப்போனால், சொந்த அத்தை மகன், மாமன் மகன் என்றாலும்கூட, வாய்க் கூசாமல் வரதட்சிணை கேட்டு, கழுத்தில் கத்திவைத்தவர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்.

கேட்பதையெல்லாம் கொடுத்து, நல்லவிதமாகத் திருமணம் செய்துகொடுத்தலும்கூட, இது நொள்ளை, இது நொட்டை என்று சொல்லாமல் இருக்க மாட்டார்கள்.

சம்பந்தி சண்டை இல்லாத கல்யாணம் என்பதே அரிதினும் அரிது. சொத்து சுகத்துக்குக் குறைவில்லாமல் இருந்தால், ஓரளவுக்கு எல்லாமே நன்றாக அமையும். இல்லாமல் போனால், வறுமையில் வாழ்பவனுக்கோ, நல்ல நடத்தை இல்லாதவனுக்கோ, தோற்றப்பொலிவு இல்லாதவனுக்கோ, நோயுற்றவனுக்கோ, கிழவர்களுக்கோ இரண்டாம் தாரமாகவோ மூன்றாம் தாரமாகவோ வாழ்க்கைப்பட வேண்டியதுதான். வறிய குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணுக்காவது இத்தகைய பாக்கியம் கிட்டாமல் போகாது.

எப்படிப்பட்டவனையும் ஒரு பெண் நினைத்தால் நல்வழிப் படுத்திவிட முடியும். (பாணி) பானை பிடித்தவள் பாக்கியசாலி போன்ற வசனங்களை வேறெதற்காகக் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள்? சாவித்திரி, நளாயினி கதைகள் எல்லாம் எதற்கு இருக்கின்றன? பெண்கள் மனமுவந்து இத்தகைய படுகுழிக்குள் போய் விழத்தானே!

கிழவர்களைத் திருமணம் செய்துகொண்ட பெண்கள் எல்லோருமே பணக்கார கிழவர்களுக்குத்தான் வாழ்க்கைப்பட்டார்கள் என்றும் சொல்ல இயலாது. இரண்டாம் தாரமாக மணந்தும்கூட வறுமையில் உழன்றவர்கள் ஏராளம்.

உண்மையில், மூத்த தாரம் இறந்து, இரண்டாம் திருமணம் செய்துகொள்ளவேண்டிய கட்டாயத்திலிருந்த வயது கடந்த ஆண்களுக்கு, அவர்களது வயதை ஒத்த பெண்கள் கிடைக்கும் வாய்ப்பே இல்லை என்பதும், கைம்பெண்களை மணக்கும் அளவுக்கு ஆண்களுக்கு மனமுதிர்ச்சி இல்லை, அதைச் சாஸ்திரங்களும் அனுமதிப்பதில்லை என்பதெல்லாமும் இத்தகைய அவலத்துக்கு முக்கியக் காரணமாக இருந்திருக்கும்.

திருமணம் செய்து அனுப்பிய பிறகு, பிறந்த வீட்டுடனான குறிப்பாகச் சகோதரிகளுடனான சுமூகமான உறவு என்பது பெண்களுக்கு அரிதாகவே வாய்க்கப் பெறுகிறது.

பெண்களுக்குப் பிறந்த வீட்டுடனான உறவு கெட்டுப் போவதற்குப் பெரும்பாலும் ஆண் அகங்காரமே காரணமாக இருந்திருக்கிறது. அத்தகைய நீயா, நானா போட்டியானது, மாமனார் மாப்பிள்ளைக்குள்ளே இருக்கலாம், மைத்துனன், சகோதரியின் கணவனுக்குள் மூளுவதாக இருக்கலாம் . எது எப்படியோ, எல்லா உறவுகளையும் உதறித் தள்ளிவிட்டு, கணவன் ஒருவனே சாஸ்வதம் என வாழ்ந்த பெண்கள் இங்கே அதிகம்.

'ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டு, மாப்பிள்ளை என்றாலும்கூட அது துள்ளிக் குதிக்குமாம்' என்கிற சொலவடை இன்றுவரை கூட நம் பேச்சில் இருக்கிறதே!

கணவனும் சரி, பிறந்த வீட்டு ஆண்களும் சரி ஒருவருக்கு இன்னொருவர் சளைத்தவரில்லை என்பதாக, ஒரு பெண்ணைப் பாசபந்தம் உள்ள ஒரு மனுஷியாகவே கருதியதில்லை.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.02.2025 இல் வெளியிடப்பெற்றது.